
Laodicean Times
லவோதிக்கேயன் டைம்ஸ்
1916 - 1879 ரீ - பிரிண்ட்ஸ் தமிழாக்கம்
தொகுப்பு 11 தொகுதி 1 ஜனவரி - மார்ச் 2021



R 5446

# “கிறிஸ்துவின் சாயலே புத்திரனுக்குரிய ஆதாரம்”

# “CHRIST LIKENESS THE EVIDENCE OF SONSHIP’

**திறவுகோல் வசனம் : 1யோவான் 2::6**
**“அவருக்குள் நிலைத்திருக்கிறேன் என்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும்”**

கிறிஸ்துவுக்குள் நிலைத்திருத்தல் என்பது, ஒருவன் முதலாவதாக அவரிடத்தில் வந்திருக்கவேண்டும் என்பதை சுட்டிக் காட்டுகிறது. இது ஒரு சரீரத்தை குறித்ததான சிந்தனையை நமக்குத் தருகிறது. எங்குமுள்ள வேத வசனங்களில் திருச்சபையை இந்த சரீரமாகவும், இயேசுவை தலையாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. தேவன் அவரை சரீரமான சபைக்கு தலையாகத் தந்தருளினார்”. இந்த சுவிசேஷ யுகக்காலத்தில் சில நபர்களுக்கு கிறிஸ்துவின் சரீர அங்கங்களாகும்படியான அழைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் ஒரே ஒரு கதவின் வழியாக மட்டுமே அந்த சரீரத்திற்குள் வரமுடியும். அது கிறிஸ்துவின் மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானமாகிய பலியின் கதவு ஆகும். நம்முடைய சுய சித்தத்தை விட்டுவிட்டு தேவசித்தத்தை எடுத்துக்கொள்வதன்மூலம் மட்டுமே நாம் ஏற்றுக்கொள்ளப்படுகிறோம். இயேசுவினுடைய அடிச்சுவடுகளில் நடக்கவும், அவரை பின்பற்றுகிறவர்களாகவும் சீஷர்களாக மாறவும் நாம் உறுதிமொழி அளித்துள்ளோம். அவரோடுகூட நாம் அடக்கம் பண்ணப்பட்டு, புதிதான ஜீவனுக்குள்ளாக நடக்க எழுந்திருக்கிறோம் – ரோமர் 6:4.

ஆனால் இம்மாதிரியான நடவடிக்கைகளை மேற்கொள்வதும், பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்வதும் மற்றும் பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதும் மட்டும் போதுமானதல்ல, நாம் தொடர்ந்து கிறிஸ்துவில் நிலைத்திருக்கிறோம் என்பதில் நிச்சயமுள்ளோராய் இருக்கவேண்டும். இயேசுவோடுகூட இணைந்திருக்கிற அனைவருக்கும் உள்ள பொதுவான அனுபவங்களை நாம் பெற்றிருக்கிறோமா ? நாம் அவரில் நிலைத்திருக்கிறோம் என்பதை உறுதிப்படுத்துவதற்கான ஒரு வழி என்னவெனில், நாம் அவரை இன்னும் நேசிக்கிறோம் என்பதை உணர்வதேயாகும். மற்றொன்று, நாம் இன்னும் தேவனுடைய வார்த்தையுடன் இணக்கமாக இருக்கிறோம் என அறிவதாகும். மூன்றாவது என்னவெனில், கர்த்தருடைய சித்தத்தை தவிர நமக்கு வேறு விருப்பம் இல்லை என்ற நிலையில் நிலைத்திருத்தலாகும். அவருடைய சமாதானமே நம்முடைய இருதயங்களிலும், வாழ்விலும் கட்டுப்படுத்தும் ஆதிக்கமாக ஆளுகை செய்வது இன்னுமொரு வழியாகும்.

**வெளித்தோற்றம் மட்டும் போதாது**
(Profession alone insufficient)

கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கம் வகிப்பதாக பலர் வெளிப்படையாக தங்களைக் காண்பித்தாலும், அவருடையவர்கள் என்பதற்கான ஆதாரங்களைத் தருவதில்லை. கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கிறேன் என்று சொல்லுகிறவன் அவர் நடந்தபடியே தானும்

## இம்மாத வெளியீட்டில்

.. கிறிஸ்துவின் சாயலே புத்திரனுக்குரிய ஆதாரம் .... 1
.. தனிமையான வழி ! – கவிதை .... 4
.. மரணத்துக்கேதுவான பாவம் பகுதி–2 ... 4
.. என் ஜெபத்தைக் கேட்டருளும் – கவிதை ... 11
.. மேசியாவின் இராஜ்யம் கண்ணுக்குப் புலப்படாதது ... 12

லவோதிக்கேயன் டைம்ஸ் தேவனுடைய வார்த்தையின் ஐசுவரியங்களை லவோதிக்கேய தூதனின் படைப்பான ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கம் வாயிலாக புரிந்துகொள்ளத்தூண்டுவதில் சகோதரர்களுக்கான ஊழியமாக வெளியிடப்படுகிறது. தொடர்புக்கு – தமிழ்நாடு வேத மாணவர்கள், M- 1043 ஹவுசிங் யூனிட், கணபதி மாநகர், கணபதி, கோயம்புத்தூர் – 6. செல் : 9344 144000

நடக்கவேண்டும் என நம்முடைய ஆதார வசனம் கூறுகிறது. மேலும் எஜமான் எவ்விதமாக நடந்தார்? பரலோகப் பிதாவினுடைய சித்தத்திற்கு இசைவாக அவர் அநுதினமும் வாழ்ந்தார். அவர் பிதாவின் சித்தத்திற்கு தம்மை முற்றிலும் ஒப்புக்கொடுத்தார். மேலும் இது மரணபரியந்தம், அதாவது கொடூரமான சிலுவையின் மரணபரியந்தமான பலியின் வாழ்க்கையைக் குறிக்கிறது.

யார் கர்த்தருடைய ஆவியைப் பெற்று, அதன் சித்தத்தின்படியே கட்டுப்படுத்தப்படுகிறாரோ, அவரே கிறிஸ்துவின் சரீர அங்கமாக இருப்பதோடு, இவ்விதத்தின்படியே நடக்கத் தேடுவதுடன், எல்லாவற்றிலும் தேவசித்தத்தையே செய்ய முற்படுவார். இந்த சித்தம் என்பதன் பொருள், பரிசுத்த நடக்கையும், தேவனிடத்தில் முழு அர்ப்பணிப்பு செய்தலும், பாவத்தை எதிர்க்கும் பாதையுமாகும். யாரெல்லாம் தேவனோடுகூட அர்ப்பணிப்பு செய்திருக்கிறார்களோ, அவர்கள் ஒவ்வொரு பாவ காரியத்திற்கும் எதிரானவர்கள். ஏனெனில் தேவனுடைய குணாதிசயமும் பாவமும் ஒன்றுக்கொன்று நேரெதிரானவைகள். தேவன் தம்முடைய நீதிக்காக நிற்கிறவர், அந்த நீதியை மீறுவது பாவமாகும் (1யோவா 3:4). யாரெல்லாம் இயேசு நடந்தபடியே நடக்கிறார்களோ, அவர்களே தெய்வீக வார்த்தைக்கும் அதின் சித்தத்திற்கும் இசைவானவர்களாவர். அநேகரைப்போல், நம்முடைய மனப்பதிவுகள் மற்றும் நம்முடைய சொந்தக் கருத்துக்களே சரியானதென்றும், அநுகூலமானதென்றும் நம்பக்கூடாது. மாறாக தேவனுடைய வார்த்தையே நம்முள் தங்கி தரித்திருந்து, நம்முடைய வாழ்வை ஆளக்கூடியதுமாக இருக்கவேண்டும். ''என்னுடைய சித்தப்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தை செய்யவே நான் வந்தேன்''. ''புஸ்தகச் சுருளில் அனைத்தும் எழுதியிருக்கிறதே'' என இயேசு கூறினார். அதுபோலவே நம்மிடையேயும் இருக்கவேண்டும். நாம் அவரிடத்தில் நிலைத்திருக்கவேண்டும், அவருக்குள் நடக்கவேண்டும். ''புஸ்தகச் சுருளில் அனைத்தும் எழுதியிருக்கிறபடி செய்ய மனதாயிருக்கவேண்டும். இவ்வழிமுறையை நான் எடுப்பேன் என்று நம்மைநாமே வெறுமனே கட்டாயப்படுத்தாமல், மாறாக தேவனே உமக்குப் பிரியமானதை செய்ய பெருமகிழ்ச்சியடைகிறேன். உம்முடைய பிரமாணம் என் உள்ளத்தில் இருக்கிறது என்று கூறலாம் – சங் 40:7,8.

**புத்திரருக்கான நிரூபணங்கள்**(Proofs of Sonship)

கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட அனைவருமே குறைந்தபட்சம் பொதுவான வகையில், தங்களை தேவப்பிள்ளைகள் எனவும், கிறிஸ்து தங்களுடைய மூத்த சகோதரர் எனவும், மனித குமாரர்களிலிருந்து தேவன் தெரிந்தெடுத்த மாபெரும் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் உரிமை பாராட்டுகின்றனர். வரவிருக்கும் மாபெரும் ராஜ்யத்தில் தாங்கள் கிறிஸ்துவின் உடன் சுதந்திரர்கள் எனவும் கருதிக்கொள்கின்றார்கள். ஆனால் அவ்வாறு கூறிக்கொள்ளும் அனைவரும் தேவனுடைய புத்திரர் அல்ல. ஏராளமானோர் தங்களை இவ்வாறு அழைத்துக் கொள்கின்றனர். அவ்விதமான புறப்பகட்டான கிறிஸ்தவர்கள், நாற்பது கோடிப்பேர் (400 மில்லியன்) உள்ளனர் என புள்ளி விபரங்கள் கூறுகின்றன. ஆனால் இந்த நாற்பதுகோடி ஜனங்களில் அநேகர், தேவ புத்திரர்கள் என நாம் நினைக்க முடியாது. அப்.பவுல் நம் கவனத்தை ஈர்ப்பதுபோல் நாம் இருதயங்களை நிதானிக்கக் கூடாதவர்களாக இருப்பதினால், மற்றவர்களுடைய வாய்மொழி மற்றும் நடத்தை மூலம் செய்யப்படும் காரியங்கள் மூலமாகவே நிதானிக்கிறோம். ஆனால் வாய்மொழியாகிய சொற்களையே இறுதியானதாக எடுத்துக்கொள்ள முடியாது. நாம் அறிந்தபடி தேவ புத்திரர்களாக இருக்கிறவர்கள், அவருடைய ஆவியினாலே வழிநடத்தப்படுவார்கள். ''மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறர்களோ அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்'' – ரோம8:14.

தேவனுடைய ஆவி என்பது என்ன? முதன்மையாக அது சத்தியத்தின் ஆவி, பரிசுத்தத்தின் ஆவி, நீதியின் ஆவி, அன்பின் ஆவியாகும். தேவனுடைய பரிசுத்தஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகள் எத்தனைபேரோ, அவர்கள் பொதுவான இந்த தேவ ஆவியுடன் இசைவாக இருப்பதை சிலவற்றில் வெளிப்படுத்துவார்கள். ஆகையால், அவர்கள் அநீதியில் நடந்து, தங்களுக்குள் பாவத்தின் போக்குகளை தடுக்க எவ்வித முயற்சியும் செய்யாதிருப்பார்களானால், அவர்கள் சத்தியத்தைவிட பிழையை விரும்பினால் அவர்களின் கனிகளே அவர்களைத் தீர்க்கும். தேவன் சத்தியத்திற்காக நிற்கிறார். அது நம் கர்த்தராகிய இயேசுவில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

எனவே யாரொருவர் தேவஆவியை உடையவரோ, அவர் தாமே சத்தியத்திற்கு ஊழியம் செய்யும்பொருட்டு,

தன்னைத்தானே பலிசெலுத்த மனதாயிருக்கிறார். அவர் சத்தியத்தை நேசிப்பதோடுகூட அன்பு மற்றும் வைராக்கியத்தின் ஆவியின்மூலம் அதை வெளிப்படுத்துவார். சாத்தானோ பாவம், பொறாமை, வெறுப்பு, தீமை, சச்சரவு போன்றவற்றின் வடிவமாக இருக்கிறான். நீதியும் அன்பும் சந்தோஷமும் சமாதானமும் பரிசுத்தஆவியின் கனிகள் ஆகும். எங்கெல்லாம் பிசாசின் கிரியைகள் வெளிப்படுத்தப்படுவதை காண்கிறோமோ, அத்தகையவர் தேவனுடைய பிள்ளையா ? என கேள்வி எழுப்ப காரணமிருக்கிறது. பொறாமையின் ஆவி, வெறுப்பின் ஆவி, தீமையின் ஆவி, சத்தியத்தை எதிர்க்கும் ஆவி, அநீதியின் ஆவி – இவை அனைத்தும் தேவபுத்திரர்களாக இருப்பவர்களால் நிராகரிக்கப்பட்டு ஜெயங்கொள்ளப்பட வேண்டும்.

ஒருவரின் சிறந்த முயற்சிகளுக்குப்பின்பும், பாவத்திற்கான அவரது மாம்சீகப் போக்குகள் அவருள் இன்னும் இருப்பதை அவர் கண்டால் அது அவருக்கு பெரிய துன்பத்தை ஏற்படுத்தும், கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்று வேதவசனங்கள் உறுதியளிப்பதன்மூலம், அவர் உற்சாகமடையலாம். அதேபோல மற்றவர்களைப் பொறுத்தவரை அவர்கள் எடுக்கும் முயற்சிக்கேற்ப அவர்களுடைய நோக்கத்தின்படி நிதானிக்கவேண்டும். தேவனுடைய ஆவி எங்குள்ளதோ அங்கு அன்பின் ஆவி உள்ளது. ஒருவர் தவறு செய்திருந்தாலோ அல்லது பிழையில் இருந்தாலோ இந்த அன்பின் ஆவியானது அவரை சரிசெய்ய, அது விரும்பும்படி செய்கிறது. அவ்வாறு அவர் தவறுவது அவருடைய ஆவியின் தவறோ அல்லது அவரது சித்தத்தின் தவறோ அல்ல. மாறாக அவர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வெறுமனே பொறியில் சிக்கிக்கொண்டார் என்பதைக் காட்டுகிறது. ஆனால் சரியான திசையில் செல்வதற்கும், சத்தியத்திற்கு சேவை செய்வதற்குமான எந்த ஆதாரமும் இல்லாமல், தனது இயல்பான மனப்பான்மைக்கேற்ப செய்து, தொடருவாரானால், அவர் தேவபுத்திரரா என்று சந்தேகப்படக் காரணம் உள்ளது.

**அவர் நடந்தபடியே எவ்வாறு நாமும் நடக்கக்கூடும் ?**
(How we can walk as he walked?)

கர்த்தருடைய சீஷர்கள் எனவும், கிறிஸ்தவர்கள் எனவும் தங்களைக் கூறிக்கொள்பவர்கள், அவர்கள் கூறியதற்கு இசைவாக தங்களுடைய வாழ்க்கை இருப்பதைக் காணவேண்டும். ஒரு மாணவன் தனது ஆசிரியரைப் பின்தொடர்வதுபோல், சீஷர் என்ற சொல்லானது பின்பற்றுபவரைக் குறிக்கிறது. நம்முடைய இரட்சகரோடுகூட நாம் பகிர்ந்துகொள்ளும்படி பிதாவானவர் நம்மை அழைத்த மகிமையான காரியங்களில் கிறிஸ்துவானவர் நம்முடைய மீட்பராகவும், முன்மாதிரியாகவும், போதகராகவும் இருக்கிறார் என்பதை உணருகிறோம். ஆகையால், நாம் அவருக்குள் இருக்கிறோம் என்று சொன்னால், அதன்படியே நம் வாழ்க்கையில் நடப்பதன்மூலம் வெளிக்காண்பிக்க வேண்டும். அவர் நடந்தபடியே நாமும் நடக்கவேண்டும்.

ஆனால் நாம் பூரணராக இல்லாதபோது, இதை எவ்வாறு செய்யமுடியும் ? “நாம் மாம்சத்தின்படியல்ல, ஆவியின்படி நடக்கிறோம்” என பதிலுரைக்கிறோம். நம்முடைய அபூரணமான மாம்சத்தை தேவன் நோக்கிப் பார்ப்பதில்லை. புதிய சிருஷ்டிகளாக நாம் மாம்சத்திற்குரிய ஜீவிகளல்ல, ஆனால் ஆவிக்குரியவர்களாயிருக்கிறோம். நம்முடைய போதகர் அவருடைய அர்ப்பணிப்பிற்குப் பிறகு, அவர் நடந்தவிதம் பற்றி அப்போஸ்தலர் பேசுகிறார். இப்பாதையில் அவர் 31/2 வருடமாக நடந்து முடித்தார். அது மாம்சத்தின்படியானதல்ல, மாறாக ஆவியின்படியான ஒரு வாழ்க்கை. அதுபோன்றே நம்மிடத்திலும் இருக்கவேண்டும். நாம் மாம்சத்தின்படியல்ல, மாறாக புதுசிருஷ்டியின்படி நடக்கிறோம். மாம்சத்தின்படியாக நாம் மரித்தவர்களாக கருதப்படுகிறோம். அவ்விதமாகவே கர்த்தரும் நம்மை எண்ணிக்கொள்கிறார். ஆக, மாம்சத்தின்படி நாம் மரித்துவிட்டால் நாம் மாம்ச விருப்பங்களின்படி நடக்கக்கூடாது.

பொதுவான நம்முடைய நடத்தையில், நம் கர்த்தர் நடந்தபடியே நாமும் நடக்கவேண்டும். நன்மையான எல்லாவற்றையும் நாம் நேசிப்பதுடன் தீமையான எல்லாவற்றையும் தவிர்க்கவேண்டும். நம்முடைய ஆண்டவரும் முன்மாதிரியுமானவரின் அடிச்சுவடுகளில் முடிந்தவரை அவரோடு நெருக்கமாக நடக்கவேண்டும். அபூரணமான சரீரத்தில் இருந்துகொண்டு மாம்சத்திலும் ஆவியிலும் பரிபூரணராயிருந்த இயேசுவைப்போல எல்லா பரிபூரணத்திலும் நடக்கமுடியாது. ஆனாலும் அவர் நடந்த பாதையில், அதே திசையில், அவர் கடந்துசென்ற அதே மகிமையான இலக்கை நோக்கி, நாமும் நடந்துசெல்ல வேண்டும். அவ்வாறே நாளுக்குநாள் உண்மையுள்ளோராக நடக்கும்போது, அவருடைய கிருபையினால் அதே மகா மேன்மையான வெகுமதியையும் அடைவோம்.

———————————

**R 5397**

## "தனிமையான வழி"

## THE SOLITARY WAY

ஐயகோ, தனிமையில் ஒரு தனிப்பாதையிலே

நடந்து செல்வது எத்துணை கிருபை வாய்ந்தது என்று எத்தனை பேருக்குத் தெரியும் ?

ஆம், தனிமை தான், அங்கிருக்கும் பெயர்சொல்லமுடியாத துன்பங்கள்

எத்தனை உள்ளது என்று வேறெந்த மானுட உள்ளமும் அறிந்திடாதே !

அழுகையிலே கழிக்கப்பட்ட இரவுகள்,

விடிந்தவுடன் சந்திக்கும் மக்களை பணிவான சிரித்த முகத்துடன் எதிர்கொள்வதும்,

உன்னுடைய ஏழ்மையான இருதயத்திடம் கிசுகிசுத்துக் கூறிக்கொள் ! இன்னும் கொஞ்சம் மாத்திரம் உன்னால் தாங்கிக்கொள்ள முடியுமா என்று !

தனிமை ! ஏழ்மை இதயமே, மேலும் கேள்வி இது தான் !

ஏன் ? இந்த வழியில் தான் நடந்திட வேண்டும் என்பது

மாறுபாடாய்த் தோன்றவில்லையா ? ஆஹா ? இல்லை !

உங்களுக்குத் தோன்றினாலும், நீ அவருடைய கால்தடங்களை பின்பற்றிச் சென்றிடு !

உனக்கு முன்பாக பயணம் செய்திட்ட பலபேர் அங்கே கூட்டமாகக் காணப்பட்டாலும்

அவருடன் பயணம்செய்ய யாரும் இல்லையே ! தனிமையாய் உணர்கின்றாயா ? ஆஹா ! என் இருதயமே,

இனியும் அது தனிமையான வழி அல்லவே !

உன்னுடைய எஜமானனும் கர்த்தருமானவர் உன்னிடம் கூறவில்லையா ?

"என் சமூகம் உனக்கு முன்பாகச் செல்லும் என்றே !

இனியும் அது தனிமையான வழி அல்லவே !

-------

**R 5451**

## "யார் மரணத்துக்கேதுவான பாவத்தைச் செய்வார்கள்?" - பகுதி 2

## "WHO COMMITS THE SIN UNTO DEATH - Part II"

ஆவியினாலே ஜெநிப்பிக்கப்பட்டு இரட்சிப்பின் பாதையில் நிற்கிற இரு வகுப்பாருக்கு அப்பால், மூன்றாவது ஒரு வகுப்பார் உள்ளனர். அவர்கள் இரண்டாம் மரணத்துக்கு செல்லவிருக்கும் வகுப்பார். மரணத்துக்கேதுவான பாவம் என்பது நன்மை செய்வதில் ஏற்படும் ஏதாவதொரு தோல்வி மட்டுமல்ல, மாறாக தீமையானதொன்றை உறுதிபட செய்வதாகும். திரள்கூட்ட வகுப்பார் மறுபடியும் பாவச்சேற்றுக்கு திரும்புகிறவர்கள் அல்லர். ஆனால் இங்கு பேசப்பட்ட வகுப்பாரோ ஆவியினாலே ஜெநிப்பிக்கப்பட்ட ஒரு வகுப்பாராயிருந்து, பின்பு படிப்படியாக அவர்களுடைய உடன்படிக்கையிலிருந்து விலகி, முற்றிலும் வீழ்ச்சியடைகிறவர்களாயிருக்கின்றனர். அவர்கள் தங்களுடைய உடன்படிக்கையை முறிக்கிறவர்களாவர். தங்களுடைய ஜீவனை தத்தம் செய்வதாக உடன்படிக்கை செய்து, பின் அதை முறித்துப்போடுவதுடன், பாவத்துக்கு மீண்டும் திரும்பி நம்பிக்கையே இல்லாத இருளுக்குள் செல்கின்றனர். இப்பாதையானது பிரகாசமான வெளிச்சத்திற்கும், அறிவிற்கும் எதிரான, மரணத்துக்கேதுவான பாவமாகும்.

யார் மரணத்துக்கு ஏதுவான பாவத்தைச் செய்வார்கள் ? மரணத்துக்கு ஏதுவான பாவம் என்பது என்ன ? தேவனால் ஜெநிப்பிக்கப்பட்டவன் பாவஞ்செய்யான்(மனப்பூர்வமாக) , ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் இருக்கிறபடியால் அவன் பாவஞ்செய்யான்". தேவனால் ஜெநிப்பிக்கப்படுதல் என்பது ஒருவருடைய புதிய மனதை அல்லது புதிய சித்தத்தையே குறிக்கும். மேலும் புதிய சிந்தையை பெற்றிருக்கும் ஒருவர், தேவனோடுகூட இசைவாக இருக்க விரும்புகின்றார். மேலும் எதுவரை புதிய மனதை, புதிய சித்தத்தை, தேவனுடைய ஆவியைப் பெற்றிருக்கிறாரோ, அதுவரை பாவஞ்செய்யாதவராக இருக்கிறார். எதுவரை அவருடைய சித்தமானது தேவனோடு இசைவாக உள்ளதோ, அதுவரை மனப்பூர்வமாக அல்லது விரும்பியோ பாவம் செய்யமாட்டார்.

பாவத்திற்கிசைவாக அவரால் இருக்கமுடியாது. புதிய சிந்தையானது பாவத்தோடு ஒப்புரவாகாது. பாவத்தோடு ஒப்புரவு ஆவாரேயானால், அது பழைய சிந்தையானது தனது கட்டுப்பாட்டை எடுத்துக்கொண்டதற்கான ஆதாரமாகும்.

மகாசபையின்(காங்கிரஸ்) செயல்பாடுகளை சீர்தூக்கிப் பார்ப்பதன்மூலம் இப்பாடத்தைக் குறித்து தெளிவாக புரிந்துகொள்ளலாம். உதாரணமாக குடியரசுக் கட்சியில் உள்ளவர்கள் ஜென்ம சுபாவமான மனிதனைக் குறிப்பதாக எண்ணிக்கொண்டு, அக்கட்சியானது அநேக காலமாக மேலோங்கி இருந்ததாக வைத்துக்கொள்வோம். பின்பு ஆட்சி மாற்றம் நடந்து, அங்கே புதிய கருத்துக்கள், புதிய யோசனைகள், புதிய விருப்பங்கள் வந்தது. வேறொரு கட்சியான ஜனநாயக கட்சியானது மகா சபையில் பெரும்பான்மையாக இருந்து ஆட்சிக்கு வந்தது. மகா சபையின் செயல்மாற்றத்தை எது கொண்டுவந்தது ? புதிய வாக்களிப்பே(vote) இந்த மாற்றத்தைக் கொண்டுவந்தது. ஜனநாயக கட்சியின் பெரும்பான்மையானவர்கள் ஒன்றுசேர்ந்து, நாள் முழுவதையும் எடுத்துக்கொண்டு, சட்டமியற்றும் அமைப்பைக் கட்டுப்பாட்டில் வைத்து, ஜனநாயகத்தின் அடிப்படையிலான அரசாங்கத்தை ஏற்படுத்த தீர்மானித்தனர். ஆனால் மகாசபையானது மறுபடியும் தனது முடிவை மாற்றி, பழையபடியே வாக்களிக்குமானால் ஜனநாயகக் கட்சியாக இனி நீடிக்கமுடியாதே போகும் நிலை உருவாகும்.

அதே போலவே புது சிருஷ்டியானது நம்முடைய ஜென்ம சரீரத்தை ஆட்கொண்டது. பின்பு இந்த புதிய சித்தமானது மறுபடியும் மாறி, மாம்சத்துக்குரிய காரியங்களுக்கு பரிந்துபேசுமானால், புதுசிருஷ்டியானது மீண்டும் பழைய சிருஷ்டியாகி விடும். அது புதிய சிருஷ்டியில்லாதே போவதுடன், பாவத்தில் புரளுகிறதாயிருக்கிறது. அந்த சித்தமானது மரணத்துக்கேதுவான பாவத்தைச் செய்துவிட்டது. புதிய சிருஷ்டியானது மரித்துவிட்டது.

**ஏசாவின் இழப்பு சபைக்கான எச்சரிப்பு**(Esau's loss a warning to the church)

அப்.பவுலினால் பயன்படுத்தப்பட்ட ஏசாவின் உதாரணமானது நமக்கு ஆழமான யோசனையைத் தருகிறது. ஏசா இழந்துபோன தன்னுடைய சேஷ்டபுத்திர உரிமையை மீண்டும் திரும்பப் பெறமுடியாமல் விருதாவாகவே கண்ணீர் சிந்தினார். இதை ஒருவகையில் யூத ஜனங்களின் நிலைமையோடு பொருத்திப் பார்க்கலாம். அவர்கள் தேவனுடைய ஆவிக்குரிய இஸ்ரயேலராகும் மாபெரும் சிலாக்கியத்தையும், வாய்ப்பையும் இழந்ததோடு, இழந்த அந்த வாய்ப்பை அவருடைய ஜனங்களாக மீண்டும் பெறமுடியவில்லை. அந்த சிலாக்கியம் அவர்களைவிட்டுப் போய்விட்டது. ஒரு தனிப்பட்ட யூதர் மனந்திரும்பி சபை வகுப்பாரில் அங்கத்தினராவதற்கு இது எந்தவொரு தடையும் ஏற்படுத்தாதபோதிலும், அதிலிருந்து மீட்டுரிமை பெற அவர்களால் கூடாதிருந்தது.

ஆனபொழுதிலும் அப்போஸ்தலருடைய வார்த்தைகள் (எபி12:16,17) சபை வகுப்பாருக்கு விசேஷமாகப் பொருந்திவருகிறது. புதுசிருஷ்டிக்கான நம்முடைய சேஷ்ட புத்திரபாகத்தை இழக்கும் அபாயம் உள்ளது. ஏசா ஒருவேளை சோற்றுக்காக தன்னுடைய சேஷ்டபுத்திர பாகத்தை இழந்துவிட்டார். பறந்துபோகிற தற்கால சந்தோஷங்களை அனுபவிக்கும்பொருட்டு ஒருவேளை கூழுக்காக – தெய்வீக சுபாவத்துக்கான உடன் பங்காளிகளாகும் மாபெரும் சுதந்திரத்தையும், மேசியாவின் இராஜ்யத்தையும் விற்றுப்போட்டு, உதாசீனப்படுத்தின கிறிஸ்தவர்களை ஏசா குறிக்கிறார்.

**யார் மன்னிக்கமுடியாத பாவத்தைச் செய்கிறார்கள்**(Who commits the unpardonable sin)

மன்னிக்கமுடியாத பாவத்தைப் பற்றிய பொதுவான கருத்தை வேதாகமப் பாடங்களின் தொகுதிகளில் (Studies in the scriptures) சுட்டிக்காட்ட முயற்சித்துள்ளோம். என்னவெனில், எந்தஅளவுக்கு அவைகள் மனப்பூர்வமானவைகளோ அந்த அளவிற்கு அவைகள் மன்னிக்கப்படமுடியாதவைகளாயிருக்கின்றன. முழுவதும் மனப்பூர்வமான பாவத்தைச் செய்கிற ஒரே வகுப்பார் யாரெனில், திருச்சபைக்குள் வந்திருந்து தங்களுடைய வாழ்வை அர்ப்பணிப்பு செய்து, பரிசுத்தஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களே ஆவர். அப்படிப்பட்டவர்கள் வீழ்ச்சியடைவார்களேயானால், அதுவே இறுதியான காரியமாகும்.

கிறிஸ்துவுக்குள் வருவதற்கு முன்பும், பரிசுத்தஆவியைப் பெறுவதற்கு முன்பும், மீறுதல்கள் நடந்திருக்கலாம். ஆனால் அம்மீறுதல்கள் அர்ப்பணிப்பு செய்த கிறிஸ்தவருடைய பொறுப்பின் அளவாக இருப்பதில்லை. கர்த்தருடைய குடும்பத்திற்குள் ஒருவர் வந்தபின்பு, அவரிடத்தில் வெளிச்சமும், ஞானமும் அதிகரிப்பதனால் அதிகமான பொறுப்புணர்வு அங்கே

வருகிறது. கர்த்தர் கூறுவதுபோல், அவருடைய சித்தத்தை அறிந்தும் அதை செய்யாமல் இருப்பவர்கள் அநேக அடிகள் பெறுவர். ஆனால் அவருடைய சித்தத்தை அறியாமலும் அதை செய்யாமலும் இருப்பவர்கள் சில அடிகளே பெறுவர். கர்த்தருடைய ஜனங்களில் அநேகர் அதிகமான அல்லது குறைவான மனப்பூர்வமான பாவங்களை செய்கிறவர்களாயிருந்து அதிகமான அல்லது குறைவான அடிகளை பெறுகின்றனர்.

வேத வசனங்கள் உரைக்கின்றபடி மரணத்துக்கேதுவான மனப்பூர்வமான பாவத்தின் ஒரு அளவானது, பரிசுத்தஆவிக்கு எதிரான பாவமாக சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, தவறு எது என உணர்ந்தபின்பு, தேவ பிரமாணத்திற்கு எதிராக மனப்பூர்வமாக , பகிரங்கமாக செய்யப்படும் பாவம் என இதைப் புரிந்துகொள்ளலாம். வெளிச்சத்துக்கு எதிராக கிறிஸ்துவை சிலுவையில் அறைந்த யூதர்கள் பெரிய அளவிலான பொறுப்பை பெற்றிருந்தார்கள். ஆயினும், “சகோதரரே, உங்கள் அதிகாரிகள் செய்ததைப்போல நீங்கள் அறியாமையினால் அதைச் செய்தீர்கள்(அப்3:17) என அப்.பேதுரு கூறுகிறார். மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறைகிறோம் என்பதை அவர்கள் உணரவில்லை. ஆனால் பரிசுத்தஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட யாரொருவரேனும் இதேவிதமான கடும் குற்றத்தில் இணைவாரானால், இது ஒரு வேறுவிதமான காரியமாக இருக்கும் என நாம் புரிந்துகொள்கிறோம். அவ்விதமாக ஆவிக்குரிய வகையில் பிரகாசமடைந்தவர்களுக்கான தண்டனையானது இரண்டாம் மரணத்திற்கும் குறைவானதாக இருக்காது.

திருச்சபையானது ஏன் இந்த மரணத்துக்கேதுவான பாவத்தை செய்யமுடியும் என அப்.பவுல் சுட்டிக் காண்பிக்கிறார் ? சத்தியத்தை அறிகிற அறிவை நாம் அடைந்தபின்பு, தேவனுடைய நல்வார்த்தைகளை ருசிபார்த்தும், பரிசுத்தஆவியைப் பெற்றும், ( நாம் தடுமாற்றத்தினால் அல்ல, முற்றிலும் வீழ்ச்சியடைந்து பாவத்துக்கு மீண்டும் திரும்பினால்) மனப்பூர்வமாக நாம் பாவஞ்செய்தால், கழுவப்பட்ட பன்றியானது மீண்டும் சேற்றில் புரளுவதற்கு ஒப்பாயிருக்கிறது. அவ்வாறான நிலைமையில் மீறுதலானது முழு அளவாயிருக்கும்.

**பரிசுத்தஆவிக்கு எதிராக ஆதாம் பாவஞ்செய்தாரா ?**(Did Adam Sin against the Holy spirit?) இக்கேள்விக்கு பதிலளிப்பதில் பரிசுத்தஆவியை எது அமைக்கிறது ? என்பது பற்றிய தெளிவான கருத்தை நாம் கொண்டிருக்கவேண்டும். வேத வசனங்களின்படியான பதில் என்னவெனில், பரிசுத்தஆவியானது தேவனுடைய நுண்ணறிவுள்ள சிருஷ்டிகளில் ஒன்றாக அது இருக்கும்போது, அது புத்திரசுவீகாரத்தின் ஆவியாகும். மிருகஜீவன்கள் இந்த புத்திரசுவீகாரத்தின் ஆவியைப் பெறுவதில்லை. அவைகள் சிருஷ்டிகருடைய தார்மீக சாயலில் உருவாக்கப்படவில்லை. தேவ தூதர்கள் இந்த புத்திரசுவீகாரத்தின் ஆவியை பெற்றிருக்கிறார்கள். ஆதாம் சிருஷ்டிகருடைய அதாவது தேவகுமாரனுடைய தார்மீக ரூபத்தின்படியும், சாயலின்படியும் சிருஷ்டிக்கப்பட்டார். ஆகவே அவர் பிதாவின் ஆவியைப் பெற்றவராக, புத்திர சுவீகாரத்தின் ஆவியைப் பெற்றவராக இருந்தார் என நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

ஆதாம் கீழ்ப்படியாதவரானபோது, அது புத்திர சுவீகாரம் பறிமுதல் செய்யப்பட்ட நிலையாகவும், மற்றும் பிதாவுடனான எல்லா உறவுகளிலிருந்தும் அவரை வெளியேற்றுவதாகவும் அர்த்தப்படுத்துகிறது. தேவனுடைனான இந்த உறவு, ஆதாமின் சந்ததியார் அனைவரிடத்திலும் பறிமுதல் செய்யப்பட்டது. ஆனாலும் ஆதாமும் அவருடைய சந்ததியினரும் விரும்பினால் மீண்டும் தேவனிடம் திரும்புவதற்கான ஏற்பாட்டை அவர் செய்திருக்கிறார். மனுக்குலத்தை மேம்படுத்துவதற்கும், மீட்டெடுப்பதற்குமான இந்த செயல்பாடு, பரிசுத்தஆவியை வழங்குவது அல்லது ஊற்றுவது என்று வேத வசனங்கள் கூறுகின்றன.

இந்த பரிசுத்தஆவி இன்னும் உலகிற்கு வந்திருக்கவில்லை, ஆனால் இப்போது இது சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த சுவிசேஷயுகத்தின்போது, புதிய சுபாவத்துக்கென ஏற்றுக்கொள்ளப்பட்ட சபையானது சில விசேஷமான நிபந்தனைகளின்கீழ் புத்திர சுவீகாரத்திற்கென ஜெநிப்பிக்கப்பட்டு தேவபுத்திரர்கள் என வகைப்படுத்தப்படுகின்றனர். புத்திரர்கள் என்ற உறவுக்குள், திருச்சபையானது தற்போது ஏற்றுக்கொள்ளப்படுவதும், பின்னர் உலகிற்கு அளிக்கப்படும் இதே ஆசீர்வாதமும் யோயேல் தீர்க்கதரிசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கர்த்தரைக்குறித்து தீர்க்கதரிசி அங்கே பேசும்போது; ‘‘அந்நாட்களில்’’ என் ஊழியக்காரர் மேலும், ஊழியக்காரிகள் மேலும் என் ஆவியை ஊற்றுவேன். மேலும் உரைக்கும்போது, தேவனோடு அவர்கள் மீண்டும் ஐக்கியப்படவும், புத்திரர்களாக மீண்டும் வரும்படியாக, மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்‘‘ என உரைத்தார்– யோயேல்2:28, 32; அப்2:16–18.

தேவ ஆவியை ஆதாம் பெற்றிருந்தார். இது இயற்கையான முறையில் பெறப்பட்டது. அது வீழ்ச்சியடையாதிருந்தால் பரிசுத்த தேவதூதர்களைப் போல, இந்த நிலையானது தக்கவைத்துக் கொள்ளப்பட்டிருக்கும். இந்த தூதர்கள் இந்த உறவை பறிகொடுக்காமல் இருப்பதால், இவர்களுக்கு பரிசுத்தஆவியின் விசேஷித்த ஊற்றுதல் அவசியமில்லை.

**ஆதாம் மனந்திரும்பியிருக்க முடியுமா ?**(Could Adam have repented)

மனப்பூர்வமான பாவத்தைச் செய்தபின், ஆதாமுக்கு மனந்திரும்ப வாய்ப்புள்ளதா ? மனந்திரும்புதல் என்ற சொல், இருவேறு வழிகளில் பயன்படுத்தப்படுகிறது. மனம்வருந்துதல், ஒரு தவறு குறித்த துக்கம், வருத்தம் போன்றவற்றைக் குறிக்க நாம் அடிக்கடி இவ்வார்த்தையைப் பயன்படுத்துகிறோம், ஆனால் பொதுவாக பயன்படுத்தப்படும் இவ்வார்த்தையானது, அதன் முழு உட்பொருளை உள்ளடக்கியிருக்கவில்லை. திரும்பப் பெறுவது, முன்னிருந்த நிலைமைக்கு திரும்புவது இதன் பொருளாகும். அல்லது ஒருவர் சென்றுகொண்டிருக்கும் பாதைக்கு நேர் எதிரான போக்கை எடுப்பதும் இதன் பொருளாகும். ஆதாம் துக்கப்பட்டதன் மூலம் மனம் வருந்தியிருக்கக்கூடும், ஆனால் அவர் பாவம்செய்வதற்கு முன்பு அவர் இருந்த இடத்திற்கு திரும்புவதற்கான அர்த்தத்தில் அவரால் மனந்திரும்ப முடியாது. அதற்கு அவர் செய்த பாவத்திற்கான விலையை இன்னொருவர் செலுத்தவேண்டியது அவசியமாயிருந்தது. பரிசுத்த பவுல் ஏசாவைப் பற்றிக் கூறும்போது, அவர் ஒரு ‘‘அசுத்தமான நபர்’’ என்றும், ‘‘பின்னர் அவர் ஆசீர்வாதத்தை சுதந்தரிக்க விரும்பினபோது, ஆகாதவனென்று தள்ளப்பட்டார். அவர் கண்ணீருடன் கவனமாகத் தேடியும் மனமாறுதலைக் காணவில்லை’’ – எபி 12:17. ஏசா அழுவதற்கும், வருத்தப்படுவதற்கும் ஏராளமான வாய்ப்புகள் இருந்தன. ஆனாலும் அவர் இழந்துபோனதை திரும்பப் பெறுவதற்கான வாய்ப்பை அவர் காணவில்லை. ஆதாமிடத்திலும் அவ்விதமே காணப்பட்டது.

ஆனால் மனந்திரும்புவதற்கான இத்தகைய இயலாமை பற்றி அப்.பவுல் சபையைக் குறித்து அர்த்தப்படுத்திப் பேசுவது முற்றிலும் வேறுபட்டது. அவர் கூறும்போது,‘‘சத்தியத்தை அறிகிற அறிவை நாம் அடைந்தபின்பு, நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்’’ – எபி 10:26,27. இப்படிப்பட்டவர்களுக்கு அங்கே மனந்திரும்புதல் கிடையாது. அவர்களுடைய இருதயங்கள் மிகவும் கடினமடைந்துள்ளன. மனந்திரும்புதலுக்கேதுவாக அவர்களைப் புதுப்பிப்பது கூடாத காரியம் (எபி 6:4–8). ஆனால் கிறிஸ்து ஆதாமுக்காக மரணத்தை ருசிபார்க்கவேண்டுமென்பதே, ஆதாமுக்காக தேவன் செய்த ஏற்பாடாகும். ஆனால் தற்பொழுதோ, கிறிஸ்துவானவர் இனி என்றென்றைக்கும் மரிப்பதில்லை. ஆகையால் கிறிஸ்துவின் மரணத்தின்மூலம் நற்பலனைப் பெற்றபின்பு, அதை தவறாக பயன்படுத்துபவர், இரண்டாம் முறையாக மரணதண்டனையின் கீழ் வருகிறார். இந்த இரண்டாம் மரணத்திலிருந்து எந்தவொரு மீட்பும் இல்லை.

**சிலரின் அடிப்படைக் காரணங்களில்லாத பயங்கள்** (Groundless fears of some)

பெரும்பான்மையான ஜனங்கள் தாங்கள் மரணத்துக்கேதுவான பாவத்தை செய்துவிட்டோம் என நினைப்பதால், வெறுமனே அப் பயத்தினால் தங்களை வதைத்துக் கொள்கிறார்கள் என நம்புகிறோம். மேலும் பெருவாரியாக, இம்மாதிரியானவர்களுக்கு கர்த்தரைக் குறித்தும் அவருடைய குணலட்சணங்கள் மற்றும் ஏற்பாட்டைக் குறித்தும் ஒரு மேலான அறிவுறுத்தல்கள் தேவைப்படுகிறது. தாங்கள் மரணத்துக்கேதுவான பாவத்தை செய்துவிட்டதாக நம்பி, தேவனோடு எந்தவகையிலும் ஒப்புரவு ஆவதற்கான நம்பிக்கையே இல்லை எனவும் தங்கள் மனதில் பேரச்சம் கொண்டிருக்கிற ஜனங்கள் நம்மிடம் வருகிறார்கள். சிலசமயங்களில் தங்களுடைய பயங்களை மட்டுமே நம்மிடம் தெரிவிப்பதால் நாங்கள் குழப்பமடைந்தோம். ஏனெனில் அவர்களுடைய வெளிப்படையான மனவருத்தம் மற்றும் மனந்திரும்புதல் அவர்களுக்கு அநுகூலமான அடையாளங்களாகும்.

இன்னும் சில சமயங்களில், அவ்விஷயங்களின் உண்மைநிலையைப் பற்றி நம்மிடம் தெரிவிக்கிறார்கள். ஐந்து நிமிடங்களுக்குள் அவர்களை முற்றிலும் விடுவிக்க நம்மால் முடிகின்றது. மேலும் அவர்கள் முற்றிலும் அவ்விஷயத்தைப் பற்றி தவறாக புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை காண்பிக்கவும் நம்மால் முடிந்தது. இது அவர்களுக்கு மிக்க சமாதானத்தைத் தந்தது. பதினெட்டு ஆண்டுகளாக இந்த சிக்கல் நீடித்தது என ஒருவர் நம்மிடத்தில் தெரிவித்திருந்தார். அதன்பின்பு அந்நபர் கர்த்தருக்குள் மிக்க சந்தோஷமடைந்து, அவரால் மிகவும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் ஊழியம் செய்துகொண்டு வருகிறார்.

ஆனால் ஒருவர் மனப்பூர்வமாகவும் பகிரங்கமாகவும் தேவனைத் துறந்தவர் என்றால், அவரை மீண்டும் திரும்பிக் கொண்டுவரமுடியாது என்பது சரியான யோசனையாகும். தேவன் உண்மைத்தன்மையுள்ள ஜனங்களைத் தேடுகிறார். அவ்வாறிருக்க ஒருவர் மனப்பூர்வமான மற்றும் வேண்டுமென்றே கீழ்ப்படியாமையைக் காட்டினால், அவர்கள் வாழ தகுதியற்றவர்களாவர். எனினும் மனந்திரும்புதலை நாம் காணும்போது, நாம் ஒரு நம்பிக்கையான பார்வையை எடுக்கலாம்.

**பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவம் மன்னிக்கமுடியாதது**(Sin against the Holy spirit unforgivable)

பரிசுத்தஆவிக்கு விரோதமான பாவத்துக்கும், மரணத்துக்கேதுவான பாவத்துக்கும் உள்ள வித்தியாசத்தை நாம் கண்டுணர வேண்டும். வேறு வகையில் சொல்ல வேண்டுமானால், பரிசுத்தஆவிக்கு விரோதமான பாவம் என்பது தேவனுடைய பார்வையில் மிகக்கொடூரமானது ஆகும். பரிசுத்தஆவிக்கு எதிராக சிறிய மற்றும் பெரிய பாவங்களையும் பற்றி நாம் யோசிக்கலாம். பரிசுத்தஆவிக்கு எதிரான எந்தவொரு பாவமும் மன்னிக்கப்படுவதில்லை. ஆனாலும் சில பாவங்கள் அடிகளுக்கு ஏதுவாகவும், மற்றவைகள் மரணதண்டனைக்கும் ஏதுவாகும்.

இயேசுவானவர் தம்முடைய வார்த்தைகளை பரிசேயருக்காக கூறும்போது, அவர்கள் புத்திர சுவீகாரத்துக்கான பரிசுத்தஆவியை பெற்றிருக்கவில்லை. ஆனாலும் கர்த்தரிடத்தில் இருந்த பரிசுத்தஆவியின் வெளிச்சத்தைப் பற்றி அவர்கள் ஓரளவு அறிந்திருந்தனர். பரிசுத்தஆவி அவரில் மிகச் சிறப்பான வகையில் வெளிப்பட்டது. யூதர்கள் அவர்களுடைய புரிந்துகொள்ளுதலின் கண்கள் எந்தஅளவிற்கு திறந்திருந்ததோ, அந்த அளவிற்கேற்ப வித்தியாசமான அளவில் கண்டனத்துக்குள்ளாயினர். குறைவான அறிவைப் பெற்று, அந்த குறைவானதை மறுதலித்தவர்கள், அதிகமாகப் பெற்று அதை நிராகரிக்கிறவர்களைக் காட்டிலும் குறைவான பொறுப்புடையவராகின்றனர். மேலும் அவரை தவறாக சித்தரிக்கிறவர்களோ, பரிசுத்த ஆவிக்கு எதிராக அவருக்குள் பாவம் செய்தவர்களைக் காட்டிலும் அதிக பாவம்செய்தவர்களல்ல.

பரிசுத்த ஆவிக்கு எதிரான பாவத்தைத் தவிர வேறு எந்த பாவமும் தூஷணங்களும் மனிதருக்கு மன்னிக்கப்படும் என நமது கர்த்தர் கூறியிருக்கிறார். இப்பாவம் அவர்களுக்கு மன்னிக்கப்படாது. பரிசேயர்கள் தெய்வீகக் குடும்பத்தில் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டாலும், ஒருபெரிய அளவிலான வெளிச்சத்தை உடையவராயிருந்தனர். அதினால் ஒரு பெரிய அளவிலான பொறுப்பை உடையவர்களாயினர். மேலும் அவர்கள் அந்த அதிக வெளிச்சத்தைப் பெற்றிருந்தும், அதைத் தவறாக அறிவித்தபோது, அவர்களது தரப்பில் ஒரு குறிப்பிட்ட அளவு மனப்பூர்வத்தை காட்டுகிறது. அதினால் அதற்கே உரிய தண்டனையை நிச்சயமாகவே பெறவேண்டும் என இயேசு கூறினார். அச்சமயத்தில் மிகச் சிலரே முழு உணர்வாற்றலின்படி குற்றமுடையவர்களாக, அதாவது முழு அறிவைப் பெற்று அதை நிராகரித்தவர்கள் என நாம் கூறலாம்.

**யூதாசின் பாவம்**(The sin of Judas)

மரணத்துக்கேதுவான பாவம் என்பது பரிசுத்த ஆவிக்கு எதிரான ஒரு முழுமையான பாவம் ஆகும். முழுமையான வெளிச்சத்துக்கும், சத்திய அறிவுக்கும் எதிரான பகிரங்கமான மனப்பூர்வமான பாவம் ஆகும். நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலுக்கு முன்பாகவும், வரவிருக்கின்ற பெந்தெகொஸ்தே ஆசீர்வாதத்திற்கும் முன்பாக இம்மாதிரியான முழு வெளிச்சத்தையும், முழு வாய்ப்பையும் பெற்றிருந்த நபரை நாம் அறிவோம். அந்த நபர் யூதாஸ் என்பவரே. அவர் கொண்டிருந்த விசேஷமான வெளிச்சம் என்பது, அவர் இயேசுவைக் கண்டிருந்தது மட்டுமல்லாமல், அவருடைய அற்புதங்களைப் பார்த்தவரும், அவரது உன்னத குணநலன்களுக்கு சாட்சியாகவும் இருந்தார். ஆனால் இயேசுவிடமிருந்து

பரிசுத்தஆவியானது கொடுக்கப்பட்டு யூதாஸ் அதை அவரே பெற்றுக்கொண்டதினிமித்தம் அதைப் பயன்படுத்தினார். பிசாசுகளைத் துரத்துதல் போன்றவற்றைச் செய்திருந்தார்.

மனுஷகுமாரன் எந்த மனுஷனால் காட்டிக்கொடுக்கப்படுகிறாரோ அவனுக்கு ஐயோ! அந்த மனிதன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும் ! (மாற்கு14:21) என இயேசு கூறினார். வெறுமனே கடிந்துகொள்ளப்படுவதோ அல்லது சிட்சைகளோ அல்லது தண்டிக்கப்படும் அளவிற்கோ இல்லாமல், அவர் போதுமான வெளிச்சத்தைப் பெற்றிருந்தார். ஆனால் இனி எந்தவொரு எதிர்கால வாய்ப்போ அல்லது நம்பிக்கையோ அவருக்கு இல்லாதபடி கண்டனம் செய்யப்படுவார். அவர் மாபெரும் வெளிச்சத்திற்கு எதிராக பாவம் செய்திருந்தார். யூதாசைத் தவிர மரணத்துக்கு ஏதுவான பாவத்தை எவரும்(சீஷர்கள்)செய்ததாக நாம் அறியவில்லை. எனினும் புதிய சிருஷ்டிகளாக பரிசுத்தஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட பின்பு உண்மையில்லாதவர்கள் என நிரூபணமானவர்களும், தேவனுடைய சிந்தையையும் பரிசுத்தஆவியையும் பெற்றவர்களும் இதே மரணத்துக்கேதுவான பாவத்தைச் செய்கிறவர்களாயிருக்கிறார்கள்.

**ஆவிக்குரிய வியாதிக்கான சிகிச்சை** (Treatment of Spiritual sickness)

மிகக் குறைந்த அளவிலான ஆவிக்குரிய நிலையில் உள்ளவர்கள், தங்களைத் தாங்களே குணப்படுத்திக் கொள்பவராகஅல்ல, மாறாக இராஜரீக ஆசாரியக் கூட்டத்தாராகிய உண்மையுள்ளவர்களின் ஊழியத்தின் மூலமாக குணப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன என்று வேத வசனங்கள் சுட்டிக் காண்பிக்கின்றன. அப்.யாக்கோபு, வியாதியுள்ளவர்களாக இருந்த சிலரைப் பற்றிப் பேசுகிறார். அப்படிப்பட்டவர்கள் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக. அவர்கள் அவனுக்காக ஜெபிக்கட்டும். விசுவாசமுள்ள ஜெபம் அவரை குணப்படுத்தி, தேவனோடு ஐக்கியப்படச் செய்யும் எனவும், மேலும் அவர் கூறும்போது, ‘‘பாவியை மனந்திரும்பச் செய்கிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன்’’–யாக்5:2. அந்த ஆத்துமா வெளிப்படையாக மரண வலியில் இருந்தாலும், போதுமான அளவு விசுவாசத்தைக் காண்பித்தால், சில உண்மையான சகோதரர்களை அழைத்து, தாழ்மையுடன் தனது பாவத்தை அறிக்கையிட்டு, அவர்களுடைய ஜெபத்தை வேண்டினாரெனில், அவர் கர்த்தரால் அநுகூலமானதாக கருதப்படும் ஒரு நடவடிக்கையை எடுப்பதாகத் தெரிகிறது. கர்த்தர் அவருக்கு கூடுதலாக மேலும் ஒரு வாய்ப்பையும், சோதனையையும்கூட தரக்கூடும்.

பொதுவாக எங்களுடைய எண்ணம் என்னவெனில், ஒரு தனி நபருக்கு எதிரான மீறுதலாக இல்லாதவரை, எந்தவொரு தனிநபரிடமும் தனது மீறுதல்களை அறிக்கையிடவேண்டிய அவசியமில்லை. ஒரு நபருக்கெதிராய் குற்றஞ்செய்திருப்பாராகில், அந்த நபரிடமே மன்னிப்பு கோருவது பொருத்தமாயிருக்கும். அவ்வாறு இல்லாதபட்சத்தில் நம்முடைய பாவங்களை கர்த்தரிடம் மட்டுமே அறிக்கையிட வேண்டும். எனினும் கர்த்தருடனான ஐக்கியத்தை இழந்து, தேவனிடமிருந்து முற்றிலும் அந்நியராகி, இனி தனக்கு வேறு எதுவும் இல்லை என்று உணருகிறதுமான அதிகபட்ச சூழ்நிலைமையின்கீழ் வருவாரெனில், அத்தகைய சகோதரர் சபையின் மூப்பர்களை வரவழைத்து பரிசுத்தஆவிக்கு எதிரான அப் பாவமானது நீக்கப்படும் பொருட்டாக, அவர்களிடம் வாக்குமூலமளிக்கும்படி அறிவுறுத்துவோம்.

**பரிசுத்த ஆவிக்கு எதிராக பொய் பேசுதல்**(Lying to the Holy spirit)

அனனியா மற்றும் சப்பீரா ஆகியோரின் பாவம் மன்னிக்கமுடியாததா ? என சிலர் கேட்டிருக்கின்றனர். அது மன்னிக்கமுடியாத பாவம் என நாம் பதிலுரைக்கிறோம். அனனியா மற்றும் சப்பீராள் இன்னும் மரித்தநிலைமையிலேயே இருக்கின்றனர். நமக்குத் தெரிந்தபடி அவர்களிருவரும் எதிர்காலத்தில் சில வாய்ப்புகளை பெறலாம். அவர்களுடைய தவறான செயல்களுடன் தொடர்புடைய மனப்பூர்வத்தின் அளவைத் தீர்மானிப்பது நமக்கானதல்ல. கர்த்தர் மட்டுமே அதை அறியமுடியுமாதலால், அவருடைய தீர்மானத்தை அவர் இன்னும் வெளிப்படுத்தவில்லை.

தற்கால வாழ்க்கையிலிருந்து மாத்திரமே அவர்கள் துண்டிக்கப்பட்டிருக்கிறார்களே தவிர, வருங்காலத்தில் சில வாய்ப்புகளை அடைவர். ஒருவேளை அவர்கள் பரிசுத்தஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருப்பார்களெனில், இவ்வாறு இருக்க வாய்ப்பில்லை. சிறுமந்தை வகுப்பாராக அல்லது திரளான கூட்டத்தினராக பங்கெடுப்பவர்கள் அனைவருக்கும் தற்கால வாழ்க்கையில் அவர்கள்

சிட்சைகளையும், சுத்திகரிப்படையும் வாய்ப்புக்களையும் பெறுகின்றனர். மேலும் அவர்களில் யாரொருவரும் எதிர்கால வாழ்வில் எவ்வித தண்டனையும் பெறுவதில்லை. நாம் உலகத்தோடு நியாயந்தீர்க்கப்படோம் என அப்போஸ்தலர் கூறுகிறார். நித்திய ஜீவனா அல்லது நித்திய மரணமா என்கிற சோதனையை தற்காலத்திலேயே நாம் பெறுகிறோம்.

அப்போஸ்தலர்களுடைய காலத்தில், ஆர்வமுள்ள ஜனங்களில் ஒரு பகுதியினரால் நிறுவப்பட்டு, உண்மையுள்ள பலர் தங்கள் உடைமைகளைவிற்று, சபையினுடைய பொது நிதியாக வழங்கினர். ஆனபொழுதிலும் சொத்துக்களை விற்று பொதுவான நிதிக்கு தரவேண்டுமென்பது யார்மேலும் அங்கே எவ்வித நிர்ப்பந்தமும் செய்யப்படவில்லை. எனினும் அவ்வாறு செய்தவர்கள் சபையில் உயர்வாக மதிக்கப்பட்டனர் என்பதே உண்மையாகும். ஆனால் உதவிசெய்யும் உண்மையான ஆவி மற்றும் பலிசெலுத்தும் ஆவி இல்லாதவர்களுக்கு, அது ஒரு கண்ணியைப் போன்றதாக இருந்தது. ஏனெனில் சகோதரருடைய அங்கீகாரம் பெறுவதே அவர்களுடைய விருப்பமாக இருந்தது.

**துணிகர வஞ்சகத்தின் அதிர்ச்சியளிக்கும் விளைவுகள்**
(Startling results of wilful deception)

அனனியாவும் சப்பீராளும் இவ்விதமான சபையினுடைய அங்கீகரிப்பைப் பெற விரும்பிய வகுப்பைச் சேர்ந்தவர்களாயிருந்து, பலியின் உண்மையான ஆவியில் குறைவுபட்டவர்களாக இருந்தனர். அவர்கள் விற்க தீர்மானித்திருந்த ஒரு சொத்து அவர்களிடம் இருந்தது. மேலும் விசுவாசிகள் முன்பாக ஓர் உயர்தர பரிசுத்தவான்களாக தங்களைக் காட்டிக்கொள்வதற்காக, அவர்கள் சொத்திலிருந்து பெறப்பட்ட முழுத்தொகையையும் சபையின் பொதுநிதிக்கு கொடுப்பதாக நடித்துள்ளனர். எனினும் அவர்களுக்கு தாராள மனப்பான்மை என்பது உள்ளூர மிகக் குறைவாகவே இருந்துள்ளது. எதிர்கால திடீர் செலவுகளுக்காக, விற்ற பணத்தின் ஒரு பகுதியை ஒருவேளை அவர்கள் நிறுத்தி வைத்திருந்தாலும், முழு தொகையினையும் பலி செலுத்தியவர்களாக காண்பித்தனர் என்பதை கூட்டாக ஒப்புக்கொண்டனர்.

அவர்களுடைய தவறான வழிமுறை வெளிப்பட்டது. அப்.பேதுரு அறிவித்தபடி சொத்தானது அவர்களுடையதாயிருந்ததினால், அதை விற்றபின், அவர்களுடைய விருப்பத்தின்படி செய்ய அவர்களுக்கு இன்னும்கூட உரிமை உண்டு. அத்தொகையில் பத்தில் ஒருபகுதியையோ அல்லது பாதி தொகையினையோ அல்லது முழுத்தொகையுமோ தர விரும்பியிருக்கும் பட்சத்தில், அந்த பரிவர்த்தனையில் அவர்கள் நேர்மையுள்ளவர்களாக இருந்திருக்கவேண்டும். ஏனெனில் அது அவர்களுடைய சொந்த விஷயமாக இருப்பதினால், அவர்களைக் குறித்து குற்றம் கண்டுபிடிக்கவோ அல்லது விமர்சிக்கவோ யாருக்கும் சிறிதளவேனும் உரிமையில்லை. எனினும் அவர்களுடைய வஞ்சகத்திலேயே முழு தவறும் அடங்கியிருக்கிறது. சபையை வஞ்சிக்கும் நோக்கமுடனும், அவர்கள் செய்த பலியைக் காட்டிலும் அதிகமான பாராட்டுதலைப் பெறும்படிக்கும், பாதியளவு தொகையை முழுத்தொகையைப்போல் கொடுத்திருக்கிறார்கள். அப்.பேதுரு கூறுகிறபடி அவர்கள் மனிதனிடத்திலல்ல, தேவனுடைய பரிசுத்தஆவிக்கு எதிராக பொய்யுரைத்தனர். இவ்விஷயத்தில் மட்டுமே அவர்கள் மரித்ததற்கான பாவம் அடங்கியிருக்கிறது.

“இவைகளைக் கேள்விப்பட்ட யாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று” என்பதே பதிவு செய்யப்பட்டுள்ளது. அதாவது, தேவனிடத்திலும் அப்போஸ்தலர்களிடத்திலும் , அவருடைய பிரதிநிதிகளிடத்திலும் மிகுந்த பயபக்தி உண்டாயிற்று. கர்த்தருக்காக தத்தம் செய்தல் என்பது அர்த்தமற்ற முறையில் இல்லாமல், அதைவிட வெகுதொலைவில் உள்ள ஒன்றாகும் என இச்சம்பவம் உணர்த்தியது. ஏற்கனவே கர்த்தர் நிமித்தமாக நியமிக்கப்பட்டவர்களுக்கு மாத்திரமல்ல, அதன்பிறகு சிறிதுகாலம் தங்களை சபையோடு அடையாளங் காட்டிக்கொள்ளும் அனைவருக்கும் இது பொருந்தும். எதற்காகவெனில், நேர்மையற்ற எவரும் சீஷத்துவத்துக்கான எவ்வித பாசாங்குகளையும் செய்யக்கூடாது என்பதே மிகச் சிறந்தது ஆகும் என உணர்த்துகிறது. இப்பாடத்தினுடைய தாக்கமானது கணிசமான காலத்திற்கு, அதாவது அப்போஸ்தலர்களுடைய வாழ்நாள் வரைக்கும் நீடித்தது.

இக்கால பரிசுத்தவான்களால் கற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பாடத்தை கடந்தகால இச்சம்பவத்தைக் கருத்திற் கொள்வதினால் பெறலாம். இப்பாடத்தின் மூலம், “இருதயமாகிய உள்ளத்தில் உண்மையிருக்க தேவன் விரும்புகிறார் . புத்திசாலித்தனம், நேர்மை மற்றும் உண்மைத்தன்மை போன்ற இக்குணங்கள் இல்லாதவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமுடியாது. மேலும் சுவிசேஷயுகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட

வகுப்பாருக்கு விரைவில் வழங்கப்படும் மகிமைகளில் பங்குபெறமுடியாது – சங்51:6.

நம்மை நாமே உற்று நோக்கும்போது, விழுந்துபோன சந்ததியார் அனைவரும் எந்தளவு அபூரணர்கள் என நாம் உணருகிறோம். மேலும், தேவனுடைய பரிபூரணத்தை நாம் கருத்திற் கொள்ளும்போது, விழுந்துபோன சிருஷ்டியானது ஒரே ஒரு குணத்தின் மூலமே தெய்வீக அங்கீகாரத்தைப் பெற்றிருக்க முடியும். அந்த ஒரே இயல்பு என்னவெனில், நேர்மையாக இருப்பதேயாகும். நேர்மையாக இருக்கும் ஒரு உண்மைக் கிறிஸ்தவர் தன்னுடைய சொந்த குறைபாடுகளையும் பெலவீனங்களையும் ஒத்துக்கொள்ளவேண்டும். அவர் தம்மைத்தாமே அல்ல, கிறிஸ்து மூலமாய் தேவனே தனக்குப் போதுமானவர் என நேர்மையாக ஒப்புக்கொள்ள வேண்டும். சுவிசேஷத்தினால் முன்தீர்மானிக்கப்பட்ட நிலைப்பாட்டிற்கு நேர்மையாயிருக்க போராட வேண்டும். தான் செய்ய வேண்டிய காரியங்களை தன்னால் செய்யமுடியாது என நேர்மையாக ஒப்புக்கொள்ள வேண்டும். இயேசுவுக்குள்ளாக தேவனுடைய நீதியானது அவருடைய கறைதிறைகளை மூடியிருக்கிறது என முழுமையாகவும் ஒளிவுமறைவின்றியும் ஏற்றுக்கொள்ள வேண்டும். உடன்படிக்கைக்குள்ளான விசுவாசிகளடங்கிய சபையில் மிகப்பெரிய பாவம் என்பது நேர்மையின்மையே என நாம் நம்புகிறோம். அனனியா மற்றும் சப்பீராள் விஷயத்தில் அவர்களுடைய பாவத்திற்கான தெய்வீக நிராகரிப்பு என்பது கச்சிதமாக விளக்கப்பட்டுள்ளது.

அப்போஸ்தலர்களின் நாட்களில் இருந்ததைப் போலவே இது இப்போதும் ஒரு தனிநபருடைய விஷயமாயிருக்கிறது. கர்த்தருடைய ஜனங்களில் ஒவ்வொரு தனிநபரும் தங்களுடைய தனிப்பட்ட நடத்தைகளுக்கு கர்த்தரிடத்திலேயே பதிலளிக்கவேண்டும். எனவே, தெய்வீக அங்கீகாரத்தைத் தேடும் அனைவரும், எங்கும்நிலவும் மாய்மாலத்தினால் ஆதிக்கம் செலுத்தப்படாமல் இருக்கத் தூண்டுகிறது. அதற்கு மாறாக, அவர்கள் தூய்மையும், நேர்மையுமான இருதயத்துடன் கர்த்தரோடுகூட நடந்துகொள்ள வேண்டும். தேவனுக்கும் அவருடைய ஊழியத்துக்காகவும் தங்களுடைய எல்லாவற்றையும் தத்தம் செய்தபின்பு, எதையும் தங்களுக்கென்று வைத்துக்கொள்ளாமல் இருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டும். மேலும் அவர்களின் நேரம், செல்வாக்கு, உடைமைகள், வாழ்க்கை ஆகியவை அனைத்தும் கர்த்தருக்கென்று அர்ப்பணிக்கப்பட்டவை என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். அவைகள் கர்த்தர் விரும்பும் விதமாக பயன்படுத்தப்பட வேண்டும் என்று அவர்கள் நம்புகிறபடியால், உண்மையுள்ள ஊழியக்காரரைப்போல அவையனைத்தும் கர்த்தருக்கு சொந்தமானவைகள் போல் பயன்படுத்தப்பட வேண்டும்.

–––––––––

**R 2218**

## “என் ஜெபத்தைக் கேட்டருளும்”

## HEAR THOU MY PRAYER

எல்லோர்மேலும் இரக்கம் வைத்திருக்கும் எந்தன்
தேவனே, என் ஜெபத்தைக் கேட்டருளும்,

தங்கம் வேண்டும் என்று நான் கேட்கவில்லை,
நிலையற்ற செல்வத்தைக் கோரவில்லை,

செல்வமிக்க அன்பளிப்புகளைக் கேட்கவில்லை,
பேராற்றலையோ, சுகத்தையோ கேட்கவில்லையே,

ஆனால் ஒன்றை மட்டும் கேட்கிறேன், என்னை உம்
கூட்டிற்குள்ளே வைத்துப் பாதுகாத்துக் கொள்ளுமே,

உம்மில் நான் எக்காலத்தும் இளைப்பாற வேண்டுமே,

தாங்கள் இதுவரை முன்கண்டிராத எந்தத் தீங்கும்
என்னை வந்தடைந்திடாதே,

ஒவ்வொரு கண்ணி வலையிலும் தப்பிக்கும் வண்ணம்
என்னை வழிநடத்துவதை நான் உணர்ந்துகொள்ளும்படி

எனக்கு உம்முடைய பலத்தைத் தந்தருளும்,

உம்மிடமிருந்து வருகின்ற பலத்தை மட்டுமே நான்
கேட்கிறேன், நான் தடுமாறி தள்ளாடக் கூடாதே,

என்னைத் தள்ளாட ஒட்டாதேயும்,

ஒரு சோதனையிலிருந்து தவிர்த்துவிடவும், ஆழமான
இருட்டிலும் என் கடமையின் பாதையைக்
கண்டுபிடிக்கவும்,

இவ்வாறாகத்தானே நான் ஓடவேண்டிய ஓட்டத்தை
ஆண்டுகள் பல கடந்தும் ஓடச் செய்யுமே,

பிரகாசமான அந்த வீட்டைக் கண்டடையச் செய்யுமே,

என்னுடைய தடுமாறும் அடிகளை ஸ்திரப்படுத்தி நான்
உம்மிடம் வந்துசேர உதவி செய்யும் எந்தன் தேவனே!

––––––––

R 5455

# “மேசியாவின் இராஜ்யம் கண்ணுக்குப் புலப்படாதது”

# “MESSIAH’S KINGDOM TO BE INVISIBLE’

**திறவுகோல் வசனம் : லூக்கா 17:21 “இதோ தேவனுடைய இராஜ்யம் உங்கள் மத்தியில் இருக்கிறதே”**

**ஆதார வசனங்கள் : லூக்கா 17:20–37.**

நம் குருவின் இந்த வார்த்தைகளை நாம் புரிந்துகொள்வது என்பது, நாம் காண்கிற அதன் காட்சி அமைப்பை கவனித்துப் பார்ப்பதைப் பொறுத்துள்ளது. இயேசுவுக்கு முன்னதாக யோவான் ஸ்நானகன் வந்து, தேவனுடைய இராஜ்யம் சமீபித்துள்ளது என்று பிரசங்கித்தார். இயேசுவே வரவிருக்கின்ற மேசியா என்றும், தேவனுடைய ஆட்டுக்குட்டி என்றும் ஏற்றவேளையில் அவர் சுட்டிக் காண்பித்தார். இயேசு தம்மைப் பூமியின் இராஜாவாக நிலைப்படுத்துவார் என்று, பல மாதங்களாகக் காத்துக்கொண்டிருந்த யோவான் ஸ்நானகன், இப்படியாக நடப்பதற்குப் பதிலாக, தன்னுடைய ஊழியம் நிறைவடையப் போவதைக் கண்டவராய், ஏரோதினால் சிறையிலே போடப்பட்டார். அவர்தான் வரவிருக்கின்ற மேசியாவா அல்லது வேறொருவருக்காகக் காத்திருக்க வேண்டுமா என்று விசாரிக்கும்படிக்கு, யோவான் இயேசுவினிடத்திற்கு ஆள் அனுப்பினார். யோவான், தான் எதிர்பார்த்த பிரகாரமாக இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கான ஆதாரங்களைக் காணமுடியாததினால் ஏமாற்றம் அடைந்தார்.

மேசியாவின் இராஜ்யத்தை ஸ்தாபிக்கப்போகிற, நீண்ட காலமாய் வாக்களிக்கப்பட்ட இராஜா இயேசுவே என்று கூறப்படுபவைகளை, பரிசேயர்களும் வேதபாரகர்களும் கேள்விப்பட்டு, அவரைப் பரியாசம் பண்ணினார்கள். இயேசுவினுடைய பின்னடியார்களின் பொருத்தமற்ற பலதரப்பட்ட கூட்டத்தைப் பரிசேயர்களும் வேதபாரகர்களும் கவனித்தார்கள். அவர்களில் ஆயக்காரர்கள், பாவிகள் மற்றும் கனமிக்க ஜனங்கள் – அதாவது செல்வாக்கிலோ, ஆஸ்தியிலோ, விசேஷித்த ஸ்தானத்திலும் இல்லாதவர்களாக காணப்பட்டனர். இயேசு ஓர் ஏமாற்றுக்காரர் என்றும், அவருடைய பின்னடியார்கள் அவரால் ஏமாற்றப்பட்டவர்கள் என்றும் அவர்கள் எண்ணினார்கள். இயேசு ஒரு ஏமாற்றுக்காரர் என்று எதனால் ஐயப்பட்டார்கள், அதை எப்படி வெளிப்படுத்தினார்கள் என்று நம் பாடம் கூறுகிறது. இவ்வாறு அவரை ஏமாற்றுக்காரராக சித்தரிப்பதன்மூலம், வஞ்சிக்கப்பட்ட அவரது பின்னடியார்களை வெளிக்கொண்டுவரலாம் எனவும் அவர்கள் எண்ணியிருந்தனர். ஆகவேதான் ஜனங்கள் முன்னிலையில், “தேவனுடைய இராஜ்யம் எப்போது வரும் ? என்றும், நீர் அதை ஸ்தாபிப்பதற்கு இன்னும் எவ்வளவு காலம் எடுக்கும் ? என்றும் இவர்கள் இயேசுவினிடத்தில் கேள்வி கேட்டார்கள்.

இயேசுவைப் பொறியிலகப்படுத்த வேண்டும் என்பதே இவர்களது நோக்கமாய் இருந்தது என்பதில் ஐயமில்லை. ஏனெனில் ஒருவேளை நீண்ட காலம் பிடிக்கும் என்று அவர் சொல்வாரானால், அவருடைய பின்னடியார்கள் மனம்தளர்ந்து போய்விடுவார்கள்; ஒருவேளை கொஞ்சக்காலம்தான் என்று இயேசு கூறுவாரானால், “உமக்குச் சேனையை நீர் எங்கிருந்து பெற்றுக்கொள்வீர் என்றும், உம்முடைய போர்ச்சேவகர்களுக்கு நீர் எப்படி ஊதியம் கொடுப்பீர் ? என்றும், எப்படி நீர் அவர்களுக்கு உணவு கொடுப்பீர் ? என்றும், நம்முடைய முழு தேசத்தாலும் எதிர்க்கமுடியாத உரோமின் அரசியல் வல்லமையுடன் எதிர்த்து யுத்தம் பண்ணுவதற்கு நீர் உரோமிற்குச் செல்வீரா ? என்றும் கேள்வி கேட்கவேண்டுமென்று திட்டமிட்டிருந்தனர்.

ஆனால் முதலாம் கேள்வியை மாத்திரமே பரிசேயர்களால் கேட்கமுடிந்தது. காரணம், அதற்கு அவர் கொடுத்த பதில் இவர்களது தவறை சுட்டிக்காட்டி, தடுமாறப் பண்ணிற்று என்பதில் ஐயமில்லை. தேவனுடைய இராஜ்யம் கூர்ந்து நோக்கும்படி வெளிப்படையாய் வராது, அதாவது தேவனுடைய இராஜ்யம் வரும்போது, ஜனங்களால் அதைக் காண இயலாது என்று இயேசு பதிலளித்தார். இன்னும் விரிவாகச் சொல்லும் வண்ணமாக, தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது, இதோ இங்கே இருக்கின்றது அல்லது இதோ அங்கே இருக்கின்றது என்று ஜனங்களால் பார்க்க இயலாது என்றும் இயேசு கூறினார். காரணம், தேவனுடைய இராஜ்யமானது தேவனுடைய வல்லமையாக இருந்து, ஜனங்கள் மத்தியில் எங்கும் ஸ்தாபிக்கப்படும்.

“இதோ தேவனுடைய இராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே” என்ற வசனத்தின் மொழிபெயர்ப்பானது தவறாய்க் காணப்படுகின்றது(வசனம் 21). ஆனால் இது

வேண்டுமென்றே செய்யப்படாத தவறாகவே உள்ளது. ஒருவேளை மொழிபெயர்ப்பாளர்கள் கவனமாய்க் கவனித்திருப்பார்களானால், இயேசுவால் மாய்மாலக்காரர்கள் என்றும், வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் என்றும் சொல்லப்பட்ட பரிசேயர்களுக்குள், தேவனுடைய இராஜ்யம் இருக்கின்றது என்று மொழிபெயர்ப்பதிலிருந்து தங்களைக் காத்துக் கொண்டிருந்திருப்பார்கள். மூலப்பிரதியிலிருந்து கவனமாக ஆய்வுசெய்யும்போது, “தேவனுடைய இராஜ்யம் உங்கள் நடுவில் இருக்கிறதே” என்பதே சரியான மொழிபெயர்ப்பாகும்.

ஓர் இராஜ்யமானது, அதன் இராஜாவினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது. இயேசு ஓர் இராஜாவாக இவர்கள் நடுவில் காணப்பட்டார், ஆனால் இவர்களோ அவரை அடையாளங் கண்டுகொள்ளவில்லை. “நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர் உங்கள் நடுவில் நிற்கிறார்” (யோவான்1:26). இப்படியாகவே சுவிசேஷ யுகம் முழுவதிலும் கிறிஸ்துவின் சபையாகிய, அவருடைய சரீரமானது உலகத்தினால் அடையாளங் கண்டுகொள்ளப்படவில்லை. “உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை”(1யோவான் 3:1). இது 18 நூற்றாண்டுகளாக உண்மையாய் இருந்துவருகின்றது. ஆனால் மாம்சத்தில் காணப்பட்ட கிறிஸ்துவும், சபையும் வேதாகமம் வாக்களிக்கிற பிரகாரமான வல்லமையிலும், மகா மகிமையிலுமான இராஜ்யம் என்ற விதத்தில், முழுமையான தேவனுடைய இராஜ்யமாகக் காணப்படவில்லை. கிறிஸ்துவும், சபையும், அப்போது தொடக்க நிலையிலுள்ள இராஜ்யமாக, கருநிலையிலான இராஜ்யமாக, தேவனுடைய ஏற்றவேளையில் அதிகாரத்தில் அமர்த்தப்படுவதற்கென ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் இராஜ்ய வகுப்பாராகக் காணப்படுகின்றனர். அந்த ஏற்றவேளையானது இப்பொழுது அண்மையில் உள்ளது என நாம் நம்புகிறோம்.

இந்த இராஜ்யமானது ஆவிக்குரிய ஒன்றாக இருக்கப்போகின்றது. ஆகையால் இதில் ஆளுகை பண்ணப்போகிறவர்கள்,தேவதூதர்கள் மற்றும் பரம பிதாவைப் போன்று, கண்களுக்குப் புலப்படாதவர்களாக இருப்பார்கள். “இன்னும் கொஞ்சக் காலத்திலே உலகம் என்னைக் காணாது” என்று இயேசு கூறியுள்ளார். தலையின் விஷயம் எப்படியாக இருக்கின்றதோ, அப்படியாகவே கிறிஸ்துவின் சபையாகிய தெரிந்துகொள்ளப்பட்ட சரீரத்தின் ஒவ்வொரு அங்கத்தினருடைய விஷயத்திலும் ஆகும். “ஒரு நிமிடத்திலே, ஒரு இமைப்பொழுதிலே நாம் மறுரூபமாக்கப்படுவோம்” என்றும், கொஞ்சக் காலத்திலே உலகம் இவர்களையும் காணாது, ஏனெனில் “மாம்சமும், இரத்தமும் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை” மேலும், மாம்சமும் இரத்தமும் ஆவிக்குரியவைகளைக் காணவும் முடியாது.

ஆயிர வருட யுகத்தில், இராஜ்யத்தின் அதிகாரமும், தேவனுடைய வல்லமையும் கிறிஸ்து மற்றும் சபை மூலமாக, மனுஷர்கள் மத்தியில் செயல்படுத்தப்படும். எனினும், அதை அவர்கள் மாம்சக் கண்களினால் காணாமல், புரிந்துகொள்ளுதலின் கண்களினால் மாத்திரமே காண்கிறவர்களாய் இருப்பார்கள். குருடாக்கப்பட்ட கண்கள் யாவும் அப்போது திறக்கப்படும். இவ்வாறாக இராஜ்யம் ஸ்தாபிக்கப்படவுள்ளது என்பதை அனைத்துக் கண்களும் காணும். இன்னுமாக பாடுகள் பட்டவராகிய அவர், தம்முடைய மகிமையில் பிரவேசித்துள்ளார் என்பதையும், அவருடைய மணவாட்டியாகிய சபை, அவரோடுகூட மகிமையில் காணப்படுகிறார்கள் என்பதையும், கிறிஸ்து மற்றும் சபை மூலமாகவே ஆயிரவருட அரசாட்சியின் ஆசீர்வாதம் தங்களுக்கு வருகின்றது என்பதையும் அனைவரும் புரிந்துகொள்வார்கள்(வெளிப்படுத்தல் 20:6).

**“மனுஷகுமாரனுடைய நாட்கள்”**

பரிசேயர்களது வாய் அடைக்கப்பட்ட பிறகு, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கித் திரும்பி; “மனுஷகுமாரனுடைய நாட்களிலொன்றைக் காணவேண்டுமென்று நீங்கள் ஆசைப்படுங் காலம் வரும் ; ஆனாலும் அதைக் காணமாட்டீர்கள்” என்று கூறினார்(லூக் 17:22). இது உண்மையுள்ளவர்களுக்கு அதிர்ச்சியான செய்தியாயிருந்தது. எனினும் தங்களால் புரிந்துகொள்ள முடியாத விஷயங்களை ஆண்டவர் கூறுவதைக் கேட்பது, அவர்களுக்குப் பழக்கப்பட்டிருந்தது. உதாரணத்திற்கு, அவருடைய மாம்சத்தையும் அவருடைய இரத்தத்தையும் பானம் பண்ணவேண்டும் என்று கூறினதும், அவர் தாம் சிலுவையில் அறையப்படவேண்டும் என்று கூறினதும் ஆகும். இவைகளையெல்லாம் சீஷர்கள் அடையாளங்கள் என்று புரிந்துகொண்டு, அவைகளின் உண்மையான அர்த்தம் என்னவாக இருக்கும் என சிந்தித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் எதிர்பார்த்திருந்த பிரகாரமாகவே, இயேசு எப்படி மாபெரும் இராஜாவாக இருக்கமுடியும், அதே வேளையில் தாங்கள் அவரையும்,

அவருடைய நாட்களையும் எப்படிக் காணாதிருக்கவும் முடியும் ? என்று சீஷர்கள் யோசித்தார்கள்.

இன்னுமாக, ''இதோ இங்கே என்றும், அதோ அங்கே என்றும், சிலர் உங்களிடத்தில் சொல்லுவார்கள்; நீங்களோ போகாமலும் பின்தொடராமலும் இருங்கள்'' என்று இயேசு தொடர்ந்து புதிராகக் கூறினார்(லூக் 17:22). சுருக்கமாகக் கூறவேண்டுமெனில், ''இப்படியாக என்னுடைய இரண்டாம் வருகையைக் குறித்து யாராகிலும் சொல்வார்களானால் நம்பாதிருங்கள். நான் இப்படியான விதத்தில் வருவேன் என்று நம்பி வஞ்சிக்கப்படாதிருங்கள். நான் எப்படி வருவேன் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். ''மின்னல் ஒரு திசையில் தோன்றி, மறுதிசைவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல மனுஷகுமாரனும் தம்முடைய நாளிலே தோன்றுவார் '' என்றவிதத்தில் இயேசு சொன்னார்(வசனம் 24).

''மின்னல்'' என்று மொழிபெயர்க்கப்பட்ட 24ம் வசனத்திலுள்ள இவ்வார்த்தைக்கான கிரேக்க வார்த்தையாகிய, "astrape" என்பதை பிரகாசித்தல் என்று மொழிபெயர்த்தால், இவ்வசனத்தை நம்மால் நன்கு புரிந்துகொள்ளமுடியும். அதாவது, மின்னலுக்குப் பதிலாக பிரகாசித்தலைக் குறிக்கும் சூரியன் இடம்பெற்றால் இவ்வசனம் நன்கு புரியும். கிழக்கில் உதித்து, மேற்கில் அஸ்தமிக்கிறது சூரியன். ஆனால் இது எவ்வாறு மனுஷகுமாரனை, அவருடைய நாட்களில் அடையாளப்படுத்தமுடியும் ? அவர் எப்படி சூரியன் போன்று இருப்பார் ? கிறிஸ்துவின் நாள் என்பது ஆயிர வருடங்கள் அடங்கியது என்றும், நம்முடைய கர்த்தரின் இவ்வார்த்தைகளானது, ''இன்னும்அநேகக் காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது. அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்க மாட்டீர்கள்''(யோவான் 16:12) என்ற இயேசுவின் மறைபொருட்களுள் ஒன்றாய் இருக்கிறது என்றும், அவருடைய வார்த்தைகள் அனைத்தையும் தெளிவாய்ப் புரிந்துகொள்ளத்தக்க, ஏற்றவேளையில் பிரகாசிப்பித்தலை அருளும் பரிசுத்தஆவியை இயேசு வாக்களித்துள்ளார் என்றும் நாம் பதிலளிக்கிறோம். இந்த வசனமானது புரிந்துகொள்வதற்கான ஏற்றவேளை வந்துவிட்டபடியால், இப்பொழுது ஆவிக்குரிய புரிந்துகொள்ளுதலை உடையவர்களுக்கு தெளிவாகிக்கொண்டுவருகிறது.

இவைகளெல்லாம் நீண்டகாலத்திற்குப் பிறகு சம்பவிப்பவைகள் என்று, சீஷர்கள் படிப்படியாக அறிந்துகொள்ளத்தக்கதாக, இயேசு தாம் முதலாவது அநேகம் பாடுபட்டு, இஸ்ரயேல் தேசத்தால் புறக்கணிக்கப்பட வேண்டுமென்று விளக்கினார். அவருடைய வந்திருத்தலுக்கான அடையாளங்கள் பற்றின அவர்களுடைய கேள்விக்கு அவர் கொடுத்த விவரத்தை (மத்தேயு24) கவனிக்கும்போது,நோவாவின் நாட்களில் நடந்ததுபோல, மனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும்'' என்று கூறினார் (லூக்கா17:26).

இங்கு திட்டவட்டமான காரியங்கள் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் காலத்தில், நீதியின் சூரியனானது வானத்தின் ஒரு எல்லை துவங்கி, மறு எல்லை வரை பிரகாசிக்க ஆரம்பிக்கும் காலத்தில், நாம் எவைகளை எதிர்பார்க்கலாம் என்பது நமக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. காலங்களுக்கான அடையாளங்களானது, உலகத்தில் வெளிப்புற நிலைமைகளில் காணப்படாது. மாறாக ஜலப்பிரளயம் வருவதற்கு முன்னதாக, நோவாவின் நாட்களில் இருந்ததுபோன்று, சோதோம் அழிக்கப்படுவதற்கு முன்னதாக லோத்தினுடைய நாட்களில் இருந்தது போன்று, உலகம் அமைதியாகவும், எப்போதும் போல் இயங்கிக்கொண்டிருக்கும். ஜனங்கள் புசித்தும், குடித்தும், திருமணம் பண்ணியும், வீடுகள் கட்டியும், விதைத்தும், நட்டும், எப்போதும்போல் செய்துகொண்டிருப்பார்கள். ஜனங்கள் இப்படியாக எப்போதும்போல் இருப்பது என்பது துன்மார்க்கத்தின் அடையாளங்கள் என்று குறிப்பிடப்படாமல், மாறாக உலகத்தோடு செயல்தொடர்பு கொள்ளவும், தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கென கிறிஸ்து ஆரம்பிக்கும் தம்முடைய இரண்டாம் பிரசன்ன காலத்தில், உலகத்துக்குச் சுட்டிக்காண்பிப்பதற்கென எவ்விதமான வெளியரங்கமான அடையாளங்கள் இருக்காது என்பதைக் கூறுவதற்கே குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஜலப்பிரளயம் மற்றும் சோதோமின் அழிவு**

உலகத்தை ஆசீர்வதிக்கப் போகிறதான மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதைக் குறித்துப் பேசிக்கொண்டிருக்கையில், ஏன் ஜலப்பிரளயம் மற்றும் சோதோமின் அழிவாகிய இரண்டு அடையாளங்கள் இடைச்செருகலாக புகுத்தப்பட்டுள்ளது ? உலகத்தின் மீதான சாபத்தை எடுத்துப்போட்டு, அதை ஆசீர்வதிக்கப் போகிறதான மேசியாவின் இராஜ்யமானது, தேவனுடைய மாபெரும் ஏற்பாடாக இருந்தாலும், இந்த இராஜ்யமானது, நம்முடைய தற்கால அமைப்புகளின் அழிவுகளின் மீதே

ஸ்தாபிக்கப்படும் என்று வேதாகமம் எங்கும் முன்னுரைத்திருப்பதே பதிலாக இருக்கின்றது. தற்காலத்திலுள்ள இந்த மதம், சமுதாயம், அரசியல் மற்றும் பொருளாதார அமைப்புகளுடைய அழிவையே, ஜலப்பிரளயத்தினாலும் சோதோமின் அழிவினாலும் இயேசுவால் சித்தரிக்கப்பட்டுள்ளது. மகா உபத்திரவத்திற்கான கொந்தளிப்பு சடுதியாக நிகழும்வரையிலும், மகா உபத்திரவம் வருவதற்கு முன்னதாக, அவர் வந்திருக்கும் காரியத்தை உலகம் காணாது, உலகம் அறியாது, உலகம் ஐயப்படாது, மற்றும் நம்பாது.

இது ஒரு மகிழ்ச்சியூட்டும் அடையாளமல்ல. ஒவ்வொரு மேகத்திலும் வெள்ளி சரிகை உள்ளது. நமது மனித தோல்விகளாகிய அழிவுகளின்மீது, இராஜ்யமானது ஸ்தாபிக்கப்பட்ட பிற்பாடு, உடனடியாக மகிமையான ஆசீர்வாதங்கள் பின்தொடரும் என்பதினால் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

உலகத்தின்மேல் பெரும் துன்பமானது சடுதியாய் வெடிப்பதை வலியுறுத்தும் வண்ணமாக, ''லோத்து சோதோமை விட்டுப் புறப்பட்ட நாளிலே வானத்திலிருந்து அக்கினியும் கந்தகமும் வருஷித்தது'' என்று இயேசு கூறினார்(லூக்கா 17:29). ''மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும்''(வசனம் 30). மகா உபத்திரவத்திற்கு முன்னானது கிறிஸ்துவின் பிரசன்னம் அல்லது Parousia என்றும், உபத்திரவத்திற்குப் பின்னானது Epiphania அல்லது வெளிப்படல் என்றும் வேற்றுமைப்படுத்திக் காண்பிக்கின்றது.

கிறிஸ்துவின் வெளிப்படுதலானது, ''அவர் ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படுவார்'' என்று கூறப்பட்டுள்ளது (2தெசலோ1:7,8). மகா உபத்திரவமானது பெரும்பாலும் உலகத்தை எரிக்கக்கூடிய ஒன்றாய் வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதற்குப் பெயர்க் கிறிஸ்தவ மண்டலத்தின் விசுவாசப் பிரமாணங்களானது, பூமி எரிந்துபோகும் என்ற கருத்தை வழங்குகின்றது. வானங்களும் எரிக்கப்படும் என்று வரும் வார்த்தைகளை இவர்கள் கவனிக்கத் தவறிவிடுகின்றனர்.

வேதாகமத்தில், அடையாள வார்த்தையான பூமி, மனித நடவடிக்கைகளிலுள்ள சமுதாய ஒழுங்கை அடையாளப்படுத்துகின்றது. கடலானது அமைதியற்ற, கொந்தளிக்கும், திரளான ஜனக்கூட்டத்தாரை அடையாளப்படுத்துகின்றது. வானங்கள் என்பது மத ரீதியான வல்லமைகளை அடையாளப்படுத்துகின்றது. இவைகளெல்லாம் மகா குழப்பத்துடன் அழிந்துபோய், இவைகளுக்குப் பதிலாக, தேவனால் வாக்களிக்கப்பட்டுள்ள புதிய வானங்களும் புதிய பூமியும் வரும் என்று பரிசுத்தவானாகிய பேதுரு நமக்குக் கூறுகின்றார்(2பேதுரு 3:10–13). புதிய வானங்கள் என்பது, கிறிஸ்துவின் இராஜ்யத்தில் மகிமையில் உள்ள கிறிஸ்து மற்றும் அவருடைய உடன் சுதந்திரர்களாகிய மகிமையடைந்த சபையை உள்ளடக்கின, புதிய ஆவிக்குரிய சமூகத்தை அடையாளப்படுத்துகின்றது. புதிய பூமி என்பது, மேசியாவின் இராஜ்யமானது ஸ்தாபிக்கும் புதிய சமுதாய ஒழுங்கை அடையாளப்படுத்துகின்றதாக இருக்கும்.

**வீட்டின்மேல் இருக்கும் பரிசுத்தவான்கள்**

ஜுவாலிக்கிற அக்கினியாக அவர் வெளிப்படுவதற்கு முன்பு, தாம் வந்திருக்கும் காலத்தை மீண்டுமாக நினைவுபடுத்தின பிற்பாடு, மாபெரும் உபத்திரவத்திற்கு அடையாளமான நெருப்பானது, தற்கால அமைப்புக்களைப் பட்சிப்பதற்கு முன்னதாக, அவருடைய உண்மையுள்ளவர்கள் அனைவரும் மரிப்பார்கள் என்றும், மரிக்கும் அக்கணமே மறுரூபமடைவார்கள் என்றும் கர்த்தர் நமக்கு உறுதியளிக்கின்றார். அடையாள வார்த்தையில், அவருடைய நாளில் (Epiphania)வெளிப்படுவதற்கு முன்னதாக, பிரசன்ன நாட்களில் இருப்பவர்கள், தங்கள் வீட்டிற்குள் வைத்திருக்கும் தங்களுடைய பொருட்களை எடுப்பதற்கென, வீட்டின்மேலிருந்து இறங்காமல் இருக்கக்கடவன் என்று கூறுகின்றார்(வசனம் 31). இதன் அர்த்தம் என்ன ?

வீடு என்பது தேவனுடைய வீட்டாரை அடையாளப்படுத்துகின்றது என்றும், வீட்டின்மேல் இருப்பவர்கள், தேவனுடைய ஜனங்களில் மிகவும் பரிசுத்தவான்களாய் இருப்பவர்களை அடையாளப்–படுத்துகின்றது என்றும் நாம் நம்புகின்றோம். இவர்கள் அந்நேரத்தில் ஓடுவதற்கான அவசியத்தை அறிந்தவர்களாக இருப்பார்கள். தங்களுடைய பொருட்களில் விலையேறப் பெற்றவைகளை எந்தளவுக்குக் காப்பாற்ற நாட வேண்டும் ? என்ற கேள்வி இவர்களுக்கு எழும்பலாம். இவர்கள் தங்களுடைய பொருட்களில் எவற்றையும் காப்பாற்றிக்கொள்ள நாடக்கூடாது என்றும் இவர்கள் எச்சரிக்கப்படுகின்றனர். அதாவது சமுதாயத்தின் சில சிலாக்கியங்கள், மனுஷர் மத்தியில் கனம், சில

பட்டங்கள் அதாவது – உதவியாளர், மூப்பர், ஊழியக்காரர் போன்றதான சிறு பதவி ஸ்தானங்களின் பெயர்கள் முதலானவைகளை இவர்கள் தக்கவைக்க நாடக்கூடாது. இவைகளையெல்லாம் காத்துக்கொள்ள முற்படுவது என்பது ஏமாற்றத்தை அளிக்கிறதாகவே இருக்கும். அனைத்தையும் நாம் விட்டுவிட வேண்டும். இல்லையெனில் அக்காலத்தின் பரீட்சைகளை நாம் வெற்றிகரமாய்க் கடந்துசெல்லமுடியாது.

இதுபோலவே வயலில் இருக்கிறவன் பின்னிட்டுத் திரும்பாமல் இருக்கவேண்டும். வயலானது, உலகத்தை அடையாளப்படுத்துகின்றது. உலகத்தைவிட்டு வெளியேறின, அதாவது பெயர்ச்சபைகளை விட்டு வெளியேறின எந்தக் கர்த்தருடைய ஜனங்களும், திரும்பிப் போகக்கூடாது. மாறாக சூழ்நிலையின் உண்மையை அவர்கள் அறிந்துகொண்டு, வயலிலிருந்து கர்த்தரிடத்திற்கு ஓடிவிடவேண்டும்.

அந்நாட்களில் கர்ப்பவதிகள் மற்றும் பால் கொடுப்பவர்கள் மீது வரும் பிரத்தியேகமான ஆபத்துக்களைக் குறித்து பரிசுத்த மத்தேயு பேசுகிறவைகள் அடையாளமானவைகள் என நம்புகிறோம். மேலும் உலகத்தை மனமாற்றவும், புதிதாக போதனை செய்ய நாடும் கிறிஸ்தவ ஜனங்களைக் குறிக்கிறது என நம்புகிறோம். இவர்கள் யுக மாற்றத்தின் நிமித்தமாகவும், "என் ஜனங்களே, அவளைவிட்டு வெளியே வாருங்கள்" என்ற அழைப்பினாலும், விசேஷித்த ஆத்தும வருத்தத்தில் காணப்படுவார்கள். அழைப்பைக் கேட்டு, அதற்குக் கீழ்ப்படிவது என்பது இப்படிப்பட்டவர்களுக்குக் கடினமானதாக இருக்கும்.

சோதோமிலிருந்து லோத்தும், அவருடைய குடும்பத்தாரும் தப்பி ஓடும்போது, அவர்கள் துரிதமாய் ஓடும்படியாகவும், அழியப் போகிறவைகளைத் திரும்பிப் பார்க்காதபடியும் எச்சரிக்கப்பட்டார்கள். ஆகவே கர்த்தருடைய ஜனங்களும் அழிந்துபோகின்றவைகளை திரும்பிப் பார்க்கக்கூடாது. அவைகள் மீது கவனம் செலுத்தக் கூடாது. "பாபிலோனை விட்டு ஓடிவிடுங்கள்!", "அவரவர் தங்கள் ஆத்துமாவைத் தப்புவியுங்கள்"(எரேமி **51:6)**. லோத்தின் மனைவி கீழ்ப்படியத் தவறி, அழியப் போகிறவைகளை ஏக்கத்துடன் திரும்பிப் பார்த்து, தப்பிக்க முடியாதவள் ஆனாள். இந்த உதாரணத்தை கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்குக் கொடுத்து, அவர்கள் தற்காலத்தின் பொருட்கள் அனைத்தையும் முழுமையாகத் துறந்து ஓடும்படியாக வலியுறுத்துகின்றார். தன்னுடைய ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான், தன் ஜீவனை இழந்துபோகிறவன் நித்தியத்திற்குரிய ஜீவனை ஆதாயமாக்கி, அதை பாதுகாத்துக் கொள்பவனாயிருப்பான்.

–––––––

**R 3277**

## "அவருடைய கிருபையின் வெற்றி எவ்வளவு மகத்தானது?"

**WHAT A TRIUMPH OF HIS GRACE IT WILL BE**

அவரது கிருபையின் வெற்றி எத்துணை
மகத்துவமானது ?

என்னையும்கூட அவர் தமது வீட்டினிலே
கொண்டுசெல்லும் போதினிலே,

தாழ்வின் சமவெளியினின்றே என்னைத் தூக்கி எடுத்தே

ஞானிகளின் மாபெரும் சத்தியவான்களின் ஊடே
என்னை நடத்திச் சென்றாரே!

எனவே தான், அவரது கிருபையின் வெற்றியின்
மகத்துவம் தான் என்ன!

இறுதியிலே, விசுவாசப் பாதையிலே என்னை
அவர் காப்பாற்றி மீட்டெடுத்தாரே,

அவர்தானே விசுவாசத்தின் அடையாளம், வேலை
ஆரம்பமாகிவிட்டதே,

அது முடியும் வரையினில் என்னை அவர் கவனித்து
வருகின்றாரே,

அவருடைய கிருபையின் வெற்றியின் மகத்துவம்
எத்துணை பெரியது!

அவருடைய கிருபையின் வெற்றி எத்துணை
பெரிதானது ?

என்னுடைய சோகமான தவறுகள் எல்லாம்
முடிந்துவிட்டனவே!

நான் விடுதலையாக்கப்பட்டேனே!

நன்மையை செய்வதற்காகவே விடுதலையாக்கப்பட்டேன்,

என்னுடைய பலவீனங்கள் அனைத்தும் ஒளியாகவே
மாற்றப்பட்டதுவே!

அவருடைய கிருபையின் வெற்றி மகத்தானதொன்றே!

என்னையும்கூட அவர் நோக்கி, நல்லது! நன்றாகச்
செய்தாய் என்று கூறிடும் போதினிலே, அவருடைய
வெற்றியின் மகத்துவம் பெரிதாமே!

மகிமையிலே என்னை அவர் சொந்தமாக்கிக் கொள்ளும்
போதினிலே, என்னுடன் அவரது அரியணையை
பகிர்ந்துகொள்ளும் வேளையிலே,

அவருடைய வெற்றியின் மகத்துவம் எத்துணை
அதிகமானதே!

–––––––––